# தன்னை தேவனென்று நினைத்த மனிதன் [12:1-3, 18-23]

*இராஜாவாகிய நேபுகாத்நேச்சார், ஒருநாள் தனது ராஜரிக அரண்மனையின்மேல் உலாவிக் கொண்டிருந்தபோது, "இது என் வல்லமையின் பராக்கிரமத்தினால், என் மகிமைப் பிரதாபத்துக்கென்று, ராஜ்யத்துக்கு அரமனையாக நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா" (தானி. 4:30) என்று தனக்குள் நினைத்துக் கூறினான். இந்த வார்த்தை இராஜாவின் வாயில் இருக்கும்போதே, வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி:*

> *ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரே, ராஜ்யபாரம் உன்னை விட்டு நீங்கிற்று. மனுஷரினின்று தள்ளப்படுவாய்; வெளியின் மிருகங்களோடே சஞ்சரிப்பாய்; மாடுகளைப்போல் புல்லை மேய்வாய்; இப்படியே உன்னதமானவர் மனுஷருடைய ராஜ்யத்தில் ஆளுகை செய்து, தமக்குச் சித்தமாயிருக்கிறவனுக்கு அதைக் கொடுக்கிறாரென்பதை நீ அறிந்துகொள்ளுமட்டும் ... (தானி. 4:31, 32).*

*உடனடியாக, நேபுகாத்நேச்சார், மிருகத்தைப்போல நடக்கையைக் காட்டும் வியாதியினால் வாதிக்கப்பட்டான் (அந்த அரசனுக்கு அவ்வியாதி, தெய்வீக தண்டனையாகவே ஏற்பட்டது; தானி. 4:25). அவன் நிலத்திற்குச் சென்று - ஒருவேளை அரண்மனைத் தோட்டத்திற்குச் சென்றிருக்கலாம் - "மாடுகளைப்போல் புல்லை மேய்ந்தான்; அவனுடைய தலை மயிர் கழுகுகளுடைய இறகுகளைப்போலவும், அவனுடைய நகங்கள் பட்சிகளுடைய நகங்களைப்போலவும் வளருமட்டும் அவன் சரீரம் ஆகாயத்துப் பனியில் நனைந்தது" (தானி. 4:33).*

*இராஜாவின் நல்லறிவு மறுபடியும் திரும்பியபோது, அவன், யெகோவாவே தனது வெற்றிக்குக் காரணம் என்பதை ஒப்புக்*

கொண்டான்: "ஆகையால் நேபுகாத்நேச்சாராகிய நான், பரலோகத்தின் ராஜாவைப் புகழ்ந்து, உயர்த்தி, மகிமைப் படுத்துகிறேன்; அவருடைய கிரியைகளெல்லாம் சத்தியமும், அவருடைய வழிகள் நியாயமுமானவைகள்; அகந்தையாய் நடக்கிறவர்களைத் தாழ்த்த அவராலே ஆகும் என்று எழுதினான்" (தானி. 4:37). "அகந்தையாய் நடக்கிறவர்களைத் தாழ்த்த அவராலே ஆகும்" என்ற வார்த்தைகளை அடிக் கோடிடுங்கள். இந்தக் கூற்றின் சத்தியத்தினுடைய வல்லமையுள்ள ஆதாரத்தை நாம் இந்த பாடத்தில் காண்போம்.

நேபுகாத்நேச்சாருக்கு ஒத்த மறுபடிவமாக, புதிய ஏற்பாட்டில் முதலாம் ஏரோது அகிரிப்பா இருக்கின்றான். இந்த ஏரோதுதான் யாக்கோபுவைக் கொலை செய்து, பேதுருவையும் கொலை செய்யும் நோக்கத்துடன் கைது செய்திருந்தவன். இப்பாடத்தைத் தொடர்ந்து படிக்கையில், "தேவன்" என்ற பட்டத்தை ஏரோது எவ்விதம் ஏற்றுக் கொண்டான் என்பதையும், கர்த்தர் எப்படி அவனைத் தாழ்த்தினார் என்பதையும் நாம் காண்போம்.

## ஏரோதின் குடும்பம்

முதலாம் ஏரோது அகிரிப்பாவைப் புரிந்துகொள்வதற்கு, நாம் அவனது பின்னணியைக் காண வேண்டியது தேவை. அவன், "தன்னைத் தேவனென்று நினைத்த மனிதனாயிருந்தான்". ஏனென்றால், தங்களைத் தேவர்கள் என்று நினைத்த ஒரு குடும்பத்திலிருந்து அவன் வந்தவனாயிருந்தான். (வேறுவார்த்தைகளில் சொல்லுவதானால், அவர்கள் தங்களை மனிதர்கள் அல்லது தேவனின் சட்டங்கள் எல்லாவற்றிற்கும் மேலாக நினைத்துக் கொண்டார்கள். அவர்கள் தங்களையும் தங்கள் சுயவிருப்பங்களையும் மட்டுமே "தொழுது கொண்டார்கள்.") அவனுடைய குடும்பத்தின் - ஏரோதின் குடும்பத்தின் - வாழ்வும், வசதி வாய்ப்புகளும், இயேசுவின் வாழ்விலும், ஆதி சீஷர்களின் வாழ்விலும் மறுபடி மறுபடி குறுக்கிட்டன.

ஏரோதின் குடும்பத்தாரில் குறைந்தது பதினோரு நபர்கள் புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டனர், அவர்களில் பத்து நபர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவைகள்

உங்கள் மனதில் பதிய வைத்துக் கொள்ள வேண்டுமென்றால், "ஏரோது" என்ற பெயர் பட்டப் பெயராகவும், பெயராகவும் வந்தது என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். அநேகர் "ஏரோது" என்று அழைக்கப்பட்டதால், இந்த குடும்பத்தைப் பற்றி அறியாதவர்கள் குழப்பமடையக் கூடிய வாய்ப்புள்ளது. இந்தக் குடும்பத்தின் உறுப்பினர்களை நல்ல முறையில் அறியவும், ஏரோது அகிரிப்பா I யாரென்று சிறந்த முறையில் புரியவும், அவனது குடும்ப மரத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட கிளைகளை ஆய்வு செய்து பார்ப்போம்.[1]

நமது ஆய்வானது, முதலாம் ஏரோது அகிரிப்பாவின் தாத்தாவாகிய பெரிய ஏரோதுவில் தொடங்குகின்றது. பெரிய ஏரோது (வேதவசனங்களில் எளிமையாக "ஏரோது" என்று அழைக்கப்பட்டவன்; லூக். 1:5க் காணவும்), இயேசு பிறந்தபோது சிறு குழந்தைகளைக் கொன்றிருந்தான் என்று நன்கறியப்பட்டவன் (மத். 2:1-19). அவன் ஏசாவின் வழி வந்த ஒரு ஏதோமியன், (கிரேக்கில் "இதேமியா" என்று அழைக்கப்படுகிறது; மாற். 3:8) ஆவான். தொடக்கத்தில், யூத விடுதலைப் போராளிகளான மக்காபேயர்களால், (ஆசாரியக் குடும்பமானது அஸ்மோனியர்கள் அல்லது ஹாஸ்மோனியர் கள் என்ற பெயரால் அழைக்கப்பட்டது) ஏதோமியர்கள் அடக்கப்பட்டிருந்தார்கள், அதனால் ஏதோமிய ஆண்கள் விருத்தசேதனத்திற்குக் கீழ்ப்படியும்படி பலவந்தப்படுத்தப் பட்டார்கள். காட்டுத்தனமான கற்பனை ஓட்டத்தில் மட்டுமே ஏதோமியர்கள், யூதர்கள் அல்லது யூத மார்க்கத்தமைந்தவர்கள் என்று அழைக்கப்பட முடியும். ஆயினும் ஏரோது, யூத குலத்தில் திருமணம் செய்து கொண்டான்; மக்காபேய பிரபுக்களின் வம்ச வழி வந்த ஒரு இளவரசியான மரியம் என்பவள் அவனது பத்து மனைவிகளில் ஒருத்தியானாள்.

பெரிய ஏரோது இளைஞனாயிருந்தபோதே கலிலேயாவின் ஆளுநரானான். சிறிது சிறிதாக அவனுக்கு அதிக நிலப்பரப்பின் பொறுப்புத் தரப்பட்டது, அத்துடன் அரச பட்டமும் கிடைத்தது. யூத குல முழுமையிலும் அவனுக்குப் பெயரும் புகழும் கிடைக்கவில்லையென்றாலும், பாதி மத ரீதியும், பாதி அரசியல் ரீதியுமான ஏரோதின் குழு ஒன்று வளர்ந்தது (மத். 22:16; மாற். 3:6; 12:13).

இந்த ஏரோது, கட்டிடங்கள்மேல் கொண்ட பெரு

விருப்பத்திற்காய் குறிப்பிடத்தக்கவனானான், எருசலேம் தேவாலயத்தை மறுபடியும் கட்டியெழுப்பியது இவனது மாபெரும் சாதனையாகும்.[2] தனக்கிருந்த அரசியல் விரோதிகளைப் பற்றிய அவனது வெறித்தனமான பயமும் அவனைக் குறிப்பிடக் கூடியவனாக்கிற்று. மக்கபேயர் குடும்பங்களின் தொடர்ந்த செல்வாக்கு பற்றிப் பயமடைந்த அவன் கிரமமாக அவர்களை அகற்றினான், மரியம்மின் மூலம் தனக்கு பிறந்த இரண்டு மகன்களையும் கூட அவன் கொலை செய்தான் (தனது சொந்த மகன்களையே கொல்லும் ஒரு மனிதன், மற்றவர்களின் மகன்களைக் கொலை செய்ததில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லையே!) கடைசியில் அவன் தான் மிகவும் நேசித்த ஒரே மனைவியான மரியம்மையும் கொலை செய்தான்.

பெரிய ஏரோது முப்பத்தியேழு வருடங்கள் அரசாண்டான், கடைசியில் அவன், அருவருப்பான, குணப்படுத்த முடியாத நோயினால் இறந்து போனான் (மத். 2:19, 20ல் அவனது இறப்பு பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது). அவன் இறந்தபோது, அவனது ஆளுகைப் பகுதியானது ரோமாபுரியினால் நான்கு பாகமாய்ப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பாகமும் ஒரு tetrarch(காற்பங்கு தேசாதிபதி)யினால் ஆளப்பட்டது. (காற்பங்கு தேசாதிபதியென்பவன் ஒரு வகையில் அரசன் என்றும் கருதப் பட்டான்; இவ்விதமாய் ஏரோது அந்திப்பா ‘‘ஏரோது அரசன்’’ என்று மாற்கு 6:14ல் அழைக்கப் படுகின்றான்.) பெரிய ஏரோதின் மூன்று மகன்கள் (முதலாம் ஏரோது அகிரிப்பாவின் பெரியப்பாமார்கள்) ஒவ்வொருவரும் ஒவ்வொரு பகுதியைப் பெற்றார்கள், நான்காவது பகுதியானது லிசானியா என்ற பெயருள்ள ஏரோதியனல்லாதவனுக்கு ஒதுக்கப்பட்டது (லூக். 3:1).

ஒரு மகனாகிய அர்கெலாயு என்பவன் யூதேயா, சமாரியா மற்றும் இதுமேயா (ஏதோம்) ஆகிய பகுதிகளின் காற்பங்கு தேசாதிபதியாக்கப்பட்டான். அவன் தனது முரட்டு குணமுள்ள சுபாவத்திற்குப் பெயர் பெற்றவன். அர்கெலாயுவுக்குப் பயந்துதான், யோசேப்பு, மரியாள், இயேசு ஆகியோர் அர்கெலாயுவின் ஆளுகைக்குட்பட்டிருந்த பெத்லகேமுக்குத் திரும்பவில்லை, மாறாக அவர்கள் கலிலேயாவிலிருந்த நாசரேத்துக்குச் சென்றார்கள் (மத். 2:19-23). யூதர்களைத் தண்டிக்க அர்கெலாயு அதிக பலத்தைப் பிரயோகம்

*பண்ணியதால் அவன் கி.பி. 6ல் கால் (பிரான்ஸ்) நாட்டிற்கு நாடு கடத்தப்பட்டான். அப்பகுதியில் ரோமாபுரியார் தொடர்ந்து பல ஆளுநர்களை ஏற்படுத்தினார்கள் (இவர்களில் பொந்தியு பிலாத்து ஐந்தாமவன் ஆவான்; லூக். 3:1).*

*இன்னொரு மகனான, ஏரோது அந்திப்பா (வேதவசனங் களில் "ஏரோது" என்று மட்டுமே அறியப்பட்டவன்; லூக். 8:3) என்பவன் கலிலேயா மற்றும் பெரேயா ஆகியவற்றின்மேல் காற்பங்கு தேசாதிபதியாக ஆனான் (மத். 14:1; லூக். 3:1, 19; 9:7; மற்றும் அப். 13:1 ஐயும் காணவும்). இயேசுவின் சொந்த ஊழிய நாட்களில் இவன் அரசாண்டதால், ஏரோதுகளிலேயே நன்கறியப்பட்டவனாயிருந்தான் (இவன் இயேசு தமது ஊழியத்தில் பெரும்பங்கை நிறைவேற்றியிருந்த கலிலேயாப் பகுதியில் அரசாண்டான்). இந்த ஏரோது வஞ்சனையுள்ளவன் (லூக். 13:31, 32), மூடநம்பிக்கையுள்ளவன் (மத். 14:1, 2; லூக். 9:7-9 ஐக் காணவும்) மற்றும் தேசத்தைத் தனது ஒழுக்கவீனத் தினால் கெடப் பண்ணும் செய்கையுள்ளவன் (மாற். 8:15) என்று வேதவசனங்களில் விளக்கப்படுகின்றான். காமவசப் பட்ட ஏரோது அந்திப்பா, ஏரோதியாள் என்ற தனது மைத் துனியை (ஏரோதியாள் அரிஸ்தோபூலுவின் மகளும், முதலாம் ஏரோது அகிர்ப்பாவின் சகோதரியுமாவாள்) சேர்த்துக் கொள்வதற்காக, தனது மனைவியை[3] தள்ளி வைத்தான். அந்த ஏரோதியாளோ அவனுடைய அரை சகோதரனான முதலாம் ஏரோது பிலிப்புவின் மனைவியாயிருந்தவள். அவனது பாவத்தை யோவான் ஸ்நானன் எதிர்த்து நின்றதால், பிரசங்கியார் தமது தலையை இழந்தார் (மத். 14:1-12; மாற். 6:14-29). பின்னாளில் இயேசுவின் விசாரணையின்போது, பிலாத்து அவரை ஏரோது அந்திப்பாவிடம் அனுப்பினான், அந்த அரசன் இயேசுவை வெட்கப்படுத்தும்படிக்குத் தனது மனிதர்களை அனுமதித்தான் (லூக். 23:7-12, 15; மற்றும் அப். 4:28ஐயும் காணவும்). கடைசியில் ஏரோது அந்திப்பா, நம்பிக்கைத் துரோகக் குற்றம் சாட்டப்பட்டு கால் (பிரான்ஸ்) நாட்டிற்கு நாடு கடத்தப்பட்டான், அங்கு அவன் மகா பரிதாபமாய் இறந்தான்.*

*பெரிய ஏரோதின் மூன்றாவது மகனாகிய இரண்டாம் ஏரோது பிலிப்பு என்பவன் இத்துரேயா மற்றும் திராகொனித்தி (இந்தப் பகுதிகள் கலிலேயக் கடலின் வடக்கு மற்றும் கிழக்கு*

*திசைகளில் இருந்தன) பகுதிக்கு காற்பங்கு தேசாதிபதியாக்கப் பட்டான். இவன் லூக்கா 3:1ல் “பிலிப்பு” என்று குறிப்பிடப் பட்டவனும், மற்ற ஏரோதுகளைப் போல அவ்வளவு துன்மார்க்கம் இல்லாதவனும் ஆவான். (இவன் தனது தகப்பனின் குணத்தை கொண்டிராமல், தன் தாயின் குணத்தைக் கொண்டிருந்தான்.) பெரிய ஏரோதுக்கு பிலிப்பு என்ற பெயருடைய இன்னொரு மகனும் இருந்தான். இந்த மற்றொரு பிலிப்பு(முதலாம் ஏரோது பிலிப்பு)வும் புதிய ஏற்பாட்டில் ‘‘பிலிப்பு’’ என்றே எளிமையாக அழைக்கப் படுகின்றான். இவனே ஏரோதியாளின் முதல் கணவன் ஆவான் (மத். 14:3; மாற். 6:17; லூக். 3:19), மற்றும் ஏரோதியாளின் மகள் சலோமியின் தகப்பனும் இவனே.*

*இது நம்மை முதலாம் ஏரோது அகிரிப்பாவிடம் கொண்டு வருகின்றது - இவன் பெரிய ஏரோதின் பேரன்; அர்கெலாயு, ஏரோது அந்திப்பா, 2ம் ஏரோது பிலிப்பு, மற்றும் 1ம் பிலிப்பு ஆகியோரின் சகோதரனுடைய மகன்; அரிஸ்தோபூலு(பெரிய ஏரோதின் மகன்களில், வேதவசனத்தின் குறிப்பிடப்படா தவன்) வின் மகன்.[4] முதலாம் ஏரோது அகிரிப்பா “ஏரோது” என்று எளிமையாகவும், அப். 12ல் மட்டும் குறிப்பிடப் படுகின்றான். இன்னும் சற்று நேரத்தில் நாம் அவனது வாழ்க் கையை இன்னும் நெருக்கமாய் ஆய்வு செய்யவிருக்கின்றோம்; ஆனால் அதைச் செய்யுமுன், வேதவசனங்களில் குறிப்பிடப் பட்டுள்ள ஏரோதின் குடும்ப உறுப்பினர்களைப் பற்றிய நமது ஆய்வைச் சற்று விரைவாக முடித்துக் கொள்வோம்.*

*முதலாம் ஏரோது அகிரிப்பாவுக்கு ஏரோதியாள் என்ற ஒரு சகோதரி இருந்தாள். அவள், இவனுடைய ஒரு பெரியப்பாவை முதல் முறையும், இன்னொரு பெரியப்பாவை இரண்டாவது முறையும் திருமணம் செய்து கொண்டாள். இவளது பெயர் மத்தேயு 14:3, 6; மாற்கு 6:17, 19, 22 மற்றும் லூக்கா 3:19 ஆகிய வசனங்களில் காணப்படுகின்றது. இவள், முதல் பெரியப்பா வான ஏரோது பிலிப்புவின் மூலம் ஒரு மகளை (சலோமி) ப் பெற்றிருந்தாள். இந்த சலோமி, ஏரோதியாளின் இரண்டாவது கணவனான ஏரோது அந்திப்பாவின் முன் நடனமாடி, பிறகு (தன் தாயால் தூண்டப்பட்டு) யோவான் ஸ்நானனுடைய தலையைக் கேட்டாள். இந்த மகள் மத்தேயு 14:6-11 மற்றும் மாற்கு 6:22-28ல் குறிப்பிடப்பட்டுள்ளாள், ஆனாலும் அவளது*

*பெயர் அதில் குறிப்பிடப்படவில்லை.*

*முதலாம் ஏரோது அகிரிப்பாவுக்கு நான்கு பிள்ளைகள் இருந்தார்கள், அவர்களில் மூன்று பேரை, அதாவது ரோம ஆளுநன் பேலிக்ஸின் மனைவியான துருசில்லாள் (24:24); இரண்டாம் ஏரோது அகிரிப்பா ("அகிரிப்பா" என்று 25:13-26:32 அழைக்கப்படுவன்) மற்றும் பெர்னீக்கேயாள் (25:13) ஆகியோரைப் பற்றி நாம் நமது பாடத்தில் பிற்பகுதியில் படிப்போம். பெர்னீக்கேயாள் தனது உடன் பிறந்த சகோதரனுடன் கொண்டிருந்த முறையற்ற உறவானது கடவுள் நம்பிக்கையே இல்லாதவர்களைக் கூட அதிர்ச்சிக்குள்ளாக்கியது.*

*புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள ஏரோதுகள் இவர்களே. இவர்களின் தற்பெருமை வியாதி மற்றும் ஒழுக்கக் கேடு ஆகியவை பற்றி நான் விபரமாக ஒன்றும் கூறவில்லை, ஆனால் இந்தக் குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் தங்கள் சொந்த காம இச்சைகளைத் திருப்திப்படுத்தவே தங்களிடம் இருந்த தாலந்துகளைப் பயன்படுத்தினார்கள் என்பதைக் காட்டப் போதுமானவை கூறப்பட்டுள்ளன என்று நான் நம்புகின்றேன்.* Henry E. Dosker, "Herod", *The International Standard Bible Encyclopedia என்ற புத்தகத்தில் ஏரோதுகளைப் பற்றிப் பின்வருமாறு கூறப்படுகின்றது:*

> *ஏரோது என்ற பெயர் … ''வீரத் தன்மை'' என்பதை அடையாளப் படுத்துகின்றது, இது தந்திரமும், நேர்மையில்லாத குணமும் உள்ள குடும்பத்திற்குச் சற்றும் பொருந்தாதது ஆகும் … மாபெரும் தன்மை என்பது ஏரோதுகளின் வரலாற்றில் குறைபடவில்லை, ஆனால் இந்தக் கூறுகள் எவைகளாயிருந்தாலும், யாரிடத்தில் காணப்பட்டாலும், ஒவ்வொரு விஷயத்திலும், இது, அவர்களிடத்தில் இருந்த தற்பெருமையினால் (இதுவே இக்குடும்பத்தார் யாவரையும் உருவழித்துப் போட்ட வேர் மற்றும் கிளையாகும்) ஒளி மங்கிக் காணப்பட்டது. ஏரோதிய இளவரசர்களில் சிலர் மறுக்க இயலாத வகையில் திறமையுடைவர்களாயிருந்தார்கள்; ஆனால் அத்திறமைகள் அனைத்தும் தவறாகப் பயன்படுத்தப்பட்டு, இஸ்ரவேல் மக்களின் நன்மைக்கான அடையாளங்கள் எதையும் விட்டு வைக்காமல் போயின. … இந்த முழுக் குடும்பத்தின் வரலாறு என்பது இடைவிடாத கூச்சல், சந்தேகம், இரகசிய சூழ்ச்சி மற்றும் அதிர்ச்சியூட்டும் ஒழுக்கக்கேடு ஆகியவை நிரம்பியதாகவே காணப்பட்டது.*

## *ஏரோதின் தோல்விகள் (12:1-3, 18-23)*

*முதலாம் ஏரோது அகிரிப்பாவின் வேர் மற்றும் கனியை சிந்தையில் வைத்துக் கொண்டு, அவனது சொந்த வரலாற்றுக்குத் திரும்புவோம்.*

*பெரிய ஏரோதினால் கொலை செய்யப்பட்டவர்களான மரியம்மின் இரண்டு மகன்களில் ஒருவனின் பெயர் அரிஸ்தோபூலு ஆகும். அரிஸ்தோபூலு கொலையான போது, அவனுக்கு ஏரோது அகிரிப்பா (அகுஸ்துராயனின் குறிப்பிடத்தக்க அமைச்சனாயிருந்தான்) என்ற பெயர் கொண்ட நான்கு வயது மகன் இருந்தான். அந்தச் சிறுவனைக் காப்பதற்காக, மரியம் அவனை ரோமாபுரிக்கு அனுப்பி வைத்தாள், அங்கு அவன் அரச மாளிகையில் வளர்ந்தான். அவனது நண்பர்களில், ராஜ குடும்பத்தைச் சேர்ந்த கிலவுதியு மற்றும் காயு கலிகுல்லா ஆகியோரும் இருந்தார்கள். கலிகுல்லா சிங்காசனத்தில் அமர்ந்த போது, ஏரோது அகிரிப்பாவுக்கு, மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இறந்த அவனது பெரியப்பாவான இரண்டாம் ஏரோது பிலிப்புவின் கால்பங்குதேச ஆளுகையுரிமையைத் தயவாய் கொடுத்தான். அவனது பெரியப்பாவான ஏரோது அந்திப்பா நாடு கடத்தப்பட்டபோது, அவனது ஆட்சிப் பகுதியையும் கலிகுல்லா, ஏரோது அகிரிப்பாவுக்குக் கொடுத்தான். கலிகுல்லா கொலை செய்யப்பட்டு, கிலவுதியு சிங்காசனத்தில் அமர்ந்த போது, புதிய சக்கரவர்த்தியான அவன், ஆளுநர்களால் ஆளப்பட்ட யூதேயா, சமாரியா மற்றும் இதுமேயா ஆகியவற்றின் அதிகாரங்களையும் ஆளுகையையும் ஏரோது அகிரிப்பாவுக்குக் கொடுத்தான். இவ்விதமாக, பெரிய ஏரோதின் எல்லா ஆட்சிப் பகுதிகளையும், அதைக்காட்டிலும் அதிகமானவற்றையும் ஏரோது அகிரிப்பா திரும்பப் பெற்றுக் கொண்டான். "சாலமோன் முதற் கொண்டு பின்வந்த எந்த ஒரு யூத முடியரசனைப் பார்க்கிலும் அதிகமான நிலப்பகுதியை அவன் ஆட்சி செய்தான்" என்று ஜிம்மி ஆலன் மேற்கோள் காட்டுகிறார்.*

*ரோமர் யூத நாட்டைப் பிடித்த பின்பு, முதன் முறையாக அப்போது தான் யூத இரத்தம் தன் நரம்புகளில் ஓடப் பெற்ற ஒரு தலைவனை யூதர்கள் பெற்றிருந்தார்கள்.[5] அவன் தனது சொந்த வாழ்க்கையில் ரோம வாழ்க்கையை மிதமிஞ்சி அனு*

பவிப்பதில் ஈடுபட்டிருந்தான், ஆனால் வெளிப்படையாக யூத அமைப்புகள் மற்றும் யூத சடங்காச்சாரங்களை ஆசரித்து வந்தான். அரசியல் ரீதியாக நன்மை கிடைக்கும்படியாக அவன் யூதர்களினிமித்தமாக ரோமாபுரியில் சார்பாகப் பேசி, யூதர்கள் மற்றும் ரோமாபுரியிடையே சுலபமாயிராத ஒரு ஒப்பந்தத்தை நிலைநாட்டினான். பலஸ்தீனத்தில் அவன் "அந்த ஆண்டின் சிறந்த குடிமகன்'' என்ற விருதைப் பெறாவிட்டாலும், அவனுக்கு முன் ஆண்ட எந்த ஏரோதைக்காட்டிலும் அதிகப் புகழ் பெற்றவனாயிருந்தான். சபையாருக்கு மறுபடியும் உபத்திரவத்தைக் கொடுத்தல் என்பது யூதர்களுக்கு ஆதரவான அவனது நடவடிக்கைகளில் ஒரு அம்சமாகவே இருந்தது.

அதிகாரம் 12ல் சித்தரிக்கப்பட்ட நிகழ்ச்சிகளின்போது, முதலாம் ஏரோது அகிரிப்பா, தனது வல்லமை மற்றும் சிறப்பின் உச்சத்தில் இருந்தான். அந்த அதிகாரத்தின் நிறைவுப் பகுதியில், அவன் "தேவன்'' என்ற பட்டத்தை விருப்பத்தோடு ஏற்றுக் கொண்டதை நாம் காண்கின்றோம், ஆனால் அந்த அதிகாரத்தில் காணப்படும் அவனுடைய செயல்பாடுகள், அவன் தன்னை அந்தக் கூட்டத்தார் "தேவன்" என்று அழைப்பதற்கு நீண்ட நாட்கள் முன்னதாகவே தன்னை ஏற்கனவே தேவன் என்று நம்பியிருந்ததைக் காட்டுகின்றன. அப். 12ல் அவன் மூன்று காட்சிகளில் தோன்றினான்; அவை ஒவ்வொன்றிலும் அவன் "தன்னை தேவன் என்று நினைத்த மனிதனாகவே'' உலாவினான்.

முதல் காட்சியில் (நாம் படித்த முந்திய பாடத்தில்) ஏரோது யூதர்களைப் பிரியப்படுத்துவதற்காக, யாக்கோபைக் கொல்லுவித்து, பேதுருவைக் கைது செய்தான்:

> அக்காலத்திலே ஏரோது ராஜா சபையிலே சிலரைத் துன்பப்படுத்தத் தொடங்கி; யோவானுடைய சகோதரனாகிய யாக்கோபைப் பட்டயத்தினாலே கொலை செய்தான். அது யூதருக்குப் பிரியமாயிருக்கிறதென்று அவன் கண்டு, பேதுருவையும் பிடிக்கத் தொடர்ந்தான் ... (வ. 1-3)

கிறிஸ்தவர்களுக்கெதிராக பகையுணர்வு இருந்ததாலோ அல்லது யூதமார்க்கத்தைப் பாதுகாக்க வேண்டும் என்று பற்றுணர்வு இருந்ததாலோ அவன் இதைச் செய்தான் என்று எவ்விடத்திலும் சுட்டிக்காட்டப்படவில்லை. இதை

வெறுமனே அரசியல் நன்மைக்காகவே அவன் செய்தான். உண்மையில், இயேசு மற்றும் அவரைப் பின்பற்றுவோர் களுடன் ஏரோதுகளின் குடும்பத்திற்கிருந்த நீண்ட தொடர்பு முறைகளைப் பார்க்கையில், இயேசுவுடன் தொடர்புடையவர் களைக் கொடுமைப்படுத்தக் காரணமாக எவ்வித சொந்த செயல்பாடும் பொதுவாக (யோவான் ஸ்நானனுக்கெதிராக ஏரோது தனிப்பட்ட வெறுப்புக் கொண்டிருந்ததால் நான் இவ்விடத்தில் "பொதுவாக" என்ற வார்த்தையை பயன்படுத்தி னேன்) இல்லையென்பது தெளிவு. ஏரோதுகளுக்கு கிறிஸ் தவத்தை அழிக்க வேண்டும் என்று பற்றியெரியும் விருப்பம் எதுவும் இருந்ததில்லை; அவர்கள் தங்களை உயர்த்திக் காட்ட வேண்டும் என்ற பற்றியெரியும் விருப்பம் கொண்டவர்களா யிருந்தார்கள். அவர்களின் அக்கிரமங்கள் எல்லாம் தங்களுக்குப் பயனளிக்கும் செயல்கள் என்ற குளிர் இரத்தம் கொண்ட தாகவே இருந்தன. அப்போஸ்தலர்களை உபத்திரவப் படுத்தும் தனது செயலின் மூலம் ஏரோது, "நான் தேவன்; ஆகவே நான் சர்வவல்லமை படைத்தவன், நான் விரும்பும் எதையும் என்னால் செய்ய முடியும்" என்று கூறினான்.

அதிகாரம் 12ல் ஏரோது தோன்றும் இரண்டாம் காட்சி, பேதுரு சிறையிலிருந்து அற்புதமாய் விடுவிக்கப்பட்டதற்குப் பிறகு வருகின்றது. "பொழுது விடிந்த பின்பு பேதுருவைக் குறித்துச் சேவகருக்குள்ளே உண்டான கலக்கம் கொஞ்சமல்ல" (வ. 18). பேதுரு அவர்களிடமிருந்து தப்பியதைக் கண்டு பிடிக்கும்போது ஏரோது அவர்களை என்ன செய்வான் என்பது பற்றிய பயம் அவர்களின் கலக்கத்திற்கு ஒரு காரணமாகும் என்பதில் சந்தேகமில்லை.

சிறைக்குள்ளும், நகரமும் முழுவதிலும், கிராமப் புறங்களி லும் பேதுருவைத் தேடி ஒரு மாபெரும் தேடுதல் வேட்டை நடைபெற்றது. "ஏரோது அவனைத் தேடிக் காணாமற் போன போது, காவற்காரரை விசாரணை செய்து. ..." (வ. 19). ஏரோது பேதுருவைப் பற்றி அக்கறைப்படவில்லை, ஆனால் தனது சொந்த நற்பெயர் குறித்து அக்கறைப் பட்டான். அவனது விரிவான பாதுகாப்பு முயற்சிகள் யாவும், பேதுரு தப்பிச் செல்ல முடியாது என்று உறுதிப்படுத்தவே செய்யப்பட்டன, ஆனால் ஏரோது அகிரிப்பா முட்டாளாகக் காணப்பட்டான் - அதை எந்த ஏரோதும் பொறுத்துக் கொள்ள முடியாததாயிருந்தது.

அவன் தப்பிச் செல்லுதல் என்பது தனது தவறாகும் என்பதை நம்ப முடியாத நிலையில் இருந்தான். அது அவனது தவறல்ல, தவறு காவற்காரார்கள் பக்கம்தான் இருக்க வேண்டும்.

"அவன் காவற்காரரை விசாரணை செய்து" ("விசாரணை செய்து" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை யானது "முழுமையாகக் கேள்விகளினால் சலித்தெடுத்தல்" என்ற அர்த்தம் தருவதாய் உள்ளது) என்ற வார்த்தைகளில் மறைந்து காணப்படும் அர்த்தத்தை நினைக்க நமக்குத் திகில் உண்டாகின்றது. ஏரோதின் விசாரணைக்காரர்களால், அந்தக் காவற்காரர்கள் இரக்கமற்ற விதத்தில் துன்பப்பட்டிருக்க வேண்டும். ஆயினும் அவர்கள் மேல் குவிக்கப்பட்ட துயரங்கள் எவ்வளவு இருந்தாலும், அவர்கள் தரப்பில் இருந்தே, நடந்தது பற்றி அவர்களால் விளக்கம் தர முடிந்தது. அவர்கள் காயமடைந்து இரத்தம் ஒழுகும் தலைகளுடனும், உடைந்து போன பற்களின் இடையிலும் "காலையில் நாங்கள் கண்ட தெல்லாம், பேதுரு அங்கில்லை என்பதே" என்று கூறவதைக் கற்பனை செய்ய என்னால் முடிகின்றது.

ஏரோதுக்கு இரண்டு தெரிவுகள் இருந்தன: அவனால் நியமிக்கப்பட்ட அந்தச் சிறு காவல் குழுவில் உள்ளவர்கள் அனைவரும் சூழ்ச்சி செய்து பேதுருவைத் தப்பவிட்டனர் என்பதையோ அல்லது ஒரு அற்புதம் நடந்திருந்தது என்பதையே அவன் நம்பியாக வேண்டும். முதலாவது கூறப் பட்டது நடப்பதற்கான சாத்தியக்கூறு, நம்ப முடியாததாகும். காவலர் ஒவ்வொருவரும் இந்தச் சதியில் ஈடுபட்டிருப்பார்கள் என்பது, அதிலும் குறிப்பாக, அச்சதியில் ஈடுபடுபவர்கள் அநேகமாகக் கொலைத் தண்டனை விதிக்கப்படுவார்கள் என்பதைக் கவனித்தும் கூட அதில் ஈடுபட்டிருப்பார்கள் என்பது நடப்பதற்கு வழியே இல்லை. இதற்கு மாறாக, ஏரோதுக்கு இரண்டாவது சாத்தியக்கூறு இருந்தது (அதாவது ஒரு அற்புதம் நடந்தது) என்பது நினைத்துப் பார்க்க முடியாததாகும். இது, இந்த அண்டத்தில் அவனைக் காட்டி லும் அதிக முக்கியமானவர் யாரோ ஒருவர் இருக்கின்றார் என்று அர்த்தமாகும், ஆக அவன் கிறிஸ்தவத்தின் உரிமை கோருதல்களை வினயமாய்க் கவனிக்க வேண்டியதாகும்.

நினைக்க முடியாததை நம்பும்படி ஏரோது தேர்ந்து கொண்டான். பேதுரு தப்பிச் செல்லுதற்குக் காவற்காரர்களே

பொறுப்பு என்பதே அவனது அதிகார நிலையானது. (அவன், "இந்நாட்களில் யார் ஒருவனையும் நம்ப முடிவதில்லை" என்று அவன் எண்ணுவதை என்னால் கற்பனை செய்ய முடிகின்றது.) ரோமானியச் சட்டத்தின்படி, கைதியொருவனைத் தப்பவிடும் காவலன் அந்தக் கைதிக்குரிய தண்டனையை அனுபவிக்க வேண்டும், ஆனால் ஏரோது கருணை காட்டியிருக்க முடியும். ஆயினும், அவன் அந்தக் காவலர்கள் பற்றிய கதையானது பரவுவதை அனுமதிக்க விரும்பவில்லை, ஆகவே, அவன், "அவர்களை [காவலர்களை]க் கொலை செய்யும்படி கட்டளையிட்டான்" (வ. 19ஆ). அவனது முன்னோர்களைப் போலவே அவனும், தனது சொந்த கௌரவத்தைக் காத்துக் கொள்வதற்காக ஒன்றுமறியாத அப்பாவிகள் எத்தனை பேரை வேண்டுமானாலும் கொல்வது ஒன்றுமில்லை என்றே அவன் நினைத்தான்.

அவர்களைக் கொலை செய்த பிறகு ஏரோது, "யூதேயா தேசத்தை விட்டுச் செசரியா பட்டணத்துக்குப் போய், அங்கே வாசம் பண்ணினான்" (வ. 19இ) என்று லூக்கா பதிவு செய்தார். ஆள்பவர், ஒரு பண்டிகைக்காக எருசலேம் வருவதும், பிறகு செசரியாவில் இருந்த தனது அரண்மனைக்குத் திரும்புவதும் நிலையான முறைமையாயிருந்தது, ஆனால் லூக்காவின் வார்த்தைகளில், ஏரோது தலைநகருக்கு அவசரமாய்த் திரும்ப முடிவெடுத்தான் என்பது மறைமுக அர்த்தமாயிருக்கின்றது. ஏரோது இன்னும் சில நாட்கள் அதிகமாக எருசலேமில் தங்கியிருந்து அப்போஸ்தலர்களை ஒவ்வொருவராகக் கொல்லத் திட்டமிட்டிருக்கலாம், ஆனால் காவற்காரர்களை அவன் அத்து மீறிக் கொல்லுவித்த செய்கையானது அவனைப் புகழ் அற்றவனாக்கியதால், சற்றுக் காலம் எருசலேமை விட்டு தொலைவில் இருப்பதே நன்மையானது என்று அவன் எண்ணியிருக்கலாம்.

பொது மக்களின் பதில்செயல் எதுவாயிருப்பினும், ஏரோது தனது முடிவு சரியானதென்றே நம்பினான். பேதுரு விடுதலையான விஷயத்தைக் கையாண்டதில் தனது செயல்பாடுகளினால் ஏரோது, "நான் தேவன்; ஆகவே நான் எல்லாம் அறிந்தவன். நான் ஒருபோதும் தவறுதில்லை" என்று கூறினான்.

அப். 12ன் கடைசிக்காட்சியே ஏரோதின் வாழ்க்கையின் கடைசிக் காட்சியாகவும் இருக்கின்றது - இதில் ஏரோதின்

*சுயமைய இருதயமானது வாசிக்கும் அனைவரும் காணும்படி வெளிப்படையாக வைக்கப்படுகின்றது. அப். 12ல் அடிப் படைச் செய்திகள் இரண்டுள்ளன. முதலாவது (நாம் நமது முந்திய பாடத்தில் கண்டது போல்) தேவன் அவரது சித்தத் தைச் செய்பவர்களுடன் கூட இருக்கின்றார். இரண்டாவது, பாடமானது வசனம் 20 முதல் 23 வரையுள்ள பகுதியில் தெளி வாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது: தேவன் தம்மை எதிர்ப்பவர் களுக்கு எதிராக இருக்கின்றார். நமது வேதவசனப் பகுதிக்கு மேல் இந்த எச்சரிக்கையை எழுதிக் கொள்வோம்! "தங்களைத் தேவன் என்று நினைத்துக் கொள்ளும் யாவரும் எச்சரிக்கையா யிருங்கள்!"*

*இவ்வசனப் பகுதியானது, "அக்காலத்திலே ஏரோது தீரியர் பேரிலும் சீதோனியர் பேரிலும் மிகவுங் கோபமாயிருந்தான்" (வ. 20அ) என்று தொடங்குகின்றது. தீருவும் சீதோனும் பெனிக்கே நாட்டின் முக்கிய பட்டணங்களாகும், இந்நாடு பலஸ்தீனத்தின் வடக்குப் பகுதியில் இருந்தது (11:19ன் குறிப்பை காணவும்). அவர்கள்மேல் ஏரோது ஏன் கோபமா யிருந்தான் என்று நமக்குக் கூறப்படவில்லை; பலஸ்தீனமும், பெனிக்கேயும் ஒரே வியாபார வழித் தடங்களில் அமைந்திருந் ததால், ஒருவேளை தீருவும் சீதோனும் நேர்மையற்ற வியாபார நடைமுறைகளில் ஈடுபட்டிருக்கலாம் என்று ஏரோது நினைத்திருக்கலாம்.*

*பெனிக்கியா நாடு "ராஜாவின் தேசத்தினால் போஷிக்கப் பட்டது" என்று வசனம் 20 குறிப்பிடுகின்றது. பெனிக்கியா கொஞ்சம் உணவு உற்பத்தி செய்தது, ஆனாலும் அதன் மக்கள் எல்லாருக்கும் அந்த உணவு போதுமானதாய் இருக்கவில்லை; அதன் மக்கள் தானியம் மற்றும் விவசாய விளை பொருட் களுக்குப் பலஸ்தீனத்தையே சார்ந்திருந்தனர் (1 இரா. 5:9-12; எஸ். 3:7). பெனிக்கியர்களுக்கு எகிப்து முதலிய நாட்டாரும் கூட இப்பொருள்களை வழங்கி வந்தனர்; ஆனால் அந்த நாடுகள் எல்லாம் தூரத்தில் இருந்தபடியினால், அவர்களின் பொருட்கள் அதிகம் விலையுள்ளவைகளாயிருந்தன. ஏரோதுடன் சமாதானம் ஏற்படுத்திக் கொள்வது அவர்களுக்கு அனுகூலமானதாயிருந்தது. ஆகையால் நாம், ''அவர்கள் [பெனிக்கியாவின் தூதுவர்கள்] ஒருமனப்பட்டு அவனிடத்தில் [ஏரோதுவினிடத்தில்] வந்து, ராஜாவின் வீட்டு விசாரணைக்*

காரனாகிய பிலாஸ்துவைத் தங்கள் வசமாக்கிச் சமாதானம் கேட்டுக் கொண்டார்கள்" (வ. 20ஆ). அநேகமாக அவர்கள் ஏரோதுவினிடத்தில் தாங்கள் பேச ஏற்பாடு செய்வதற்கு பிலாஸ்துவை ''வசப்படுத்துவதற்காகப்'' பிலாஸ்துவுக்கு இலஞ்சம் கொடுத்திருக்க வேண்டும். "வீட்டு விசாரணைக் காரன்" என்பது இராஜாவின் படுக்கையறைப் பொறுப்பாளன் என்பதைக் குறிக்கும், ஆனால் அவன் ராஜாவின் சொந்த காரியங்களையும் பொறுப்பேற்றுக் கவனிப்பவனாய் இருந்தான். மெக்கார்டின் மொழிபெயர்ப்பில் இது "the king's butler" என்றுள்ளது. NIV யில் "a trusted personal servant of the king" என்றுள்ளது.

அவர்கள் பேசுவதை இராஜா கேட்பதற்காக ஒரு நாள் நியமிக்கப்பட்டது. (மேற்கத்திய வசனத்தில் குறிப்பிட்டப்படி) யோசிப்பஸ் இந்த நிகழ்ச்சியைப் பற்றிய விபரமான குறிப்புத் தருகின்றார். அந்த நாளானது, கிலவுதியு ராயனை மேன்மைப் படுத்தும் விசேஷ கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக இருந்ததென்று அவர் குறிப்பிட்டார். "குறித்த நாளிலே ஏரோது ராஜ வஸ்திரம் தரித்துக்கொண்டு, சிங்காசனத்தின் மேல் உட்கார்ந்து, அவர்களுக்குப் பிரசங்கம் பண்ணினான்" (வ. 21). ஏரோதின் "ராஜ வஸ்திரத்தைப்" பற்றி யோசிப்பஸ், பின்வரும் வார்த்தைகளில் விளக்குகின்றார்:

> இரண்டாம் நாளிலே அவன் [அகிரிப்பா], முழுவதும் வெள்ளியினால் செய்யப்பட்டதும், அற்புதமான வேலைப் பாடு கொண்டதுமான ஒரு ஆடையைப் பகட்டாக அணிந்து கொண்டு அதிகாலை நேரத்தில் அரங்கத்தினுள் வந்தான்; அந்த நேரத்தில் தோன்றிய சூரியனின் புதிய கதிர்கள் அவன் அணிந்திருந்த ஆடையிலிருந்த வெள்ளியின் மேல் பட்டு, வியப்பான முறையில் ஒளி வீசி, அதன் பிரகாசமானது அதை உற்று நோக்கும் யாவருக்கும் பயத்தை ஏற்படுத்துவதாய் இருந்தது: … (Josephus, *Antiquities* 19.8.2 [10-18]).

"அப்பொழுது ஜனங்கள்: இது மனுஷ சத்தமல்ல, இது தேவ சத்தம் என்று ஆர்ப்பரித்தார்கள்'' (வ. 22). இதைப் பற்றி யோசிப்பஸ், ''அவனை முகஸ்துதி செய்தவர்கள், அவன் தேவன் என்று ஒருவன் ஓரிடத்திலிருந்தும், இன்னொருவன் வேறிடத்திலிருந்தும் ஆர்ப்பரித்துக் கூறினார்கள்'' என்று சொன்னார் (Josephus, *Antiquities* 19.8.2 [18-21]). இந்த

ஆர்ப்பரிப்பை, தீரு மற்றும் சீதோனிலிருந்து வந்தவர்கள் (மற்றும் அவனது விசேஷ சலுகையைப் பெற விரும்பியவர்கள்) தான் வழி நடத்தியிருக்க வேண்டும்.

ஏரோதுவை அவர்கள் "தேவன்" என்றழைத்தபோது அது அவன் மரணமடையும்படி அவனைப் பயமுறுத்தியிருக்க வேண்டும். கொர்நேலியு, பேதுருவின் கால்களில் விழுந்தபோது அந்த அப்போஸ்தலர் உடனடியாக அந்த நூற்றுக்கு அதிபதியை எழுந்திருக்கச் சொல்லி, "எழுந்திரும்; நானும் ஒரு மனுஷன் தான்" (10:26) என்று கூறினார். பின்னால், லீஸ்திராவில் இருந்த குடிமக்கள் பவுலையும் பர்னபாவையும் நோக்கி, "தேவர்கள் … நம்மிடத்தில் இறங்கி வந்திருக்கிறார்கள்'' என்று கூறியதையும் - அந்த ஊழியக்காரர்கள் தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டு அதிர்ச்சியில் நிலைகுலைந்ததையும் (14:11, 14) நாம் காணப்போகின்றோம். இருப்பினும், ஏரோது அகிரிப்பா, கூட்டத்திலிருந்து ஏற்பட்ட இந்த மதிப்பீட்டை ஏற்றுக் கொள்ள அதிக விருப்பம் கொண்டவனாயிருந்தான். யோசிப்பஸ் இதைப் பற்றி, ''அவன் அவர்களைக் கடிந்து கொள்ளவுமில்லை, தேவனை இகழும் அவர்களின் முகஸ் துதியை மறுக்கவும் இல்லை" (Josephus, *Antiquities* 19.8.2 [25-26]) என்று கூறினார். முகஸ்துதியை ''முட்டாள்களின் உணவு'' என்று ஜோனத்தான் ஸ்விஃப்ட் அழைத்தார். அந்த அரங்கத்தில் குரல்கள் எதிரொலிக்கையில் ஏரோது அதை வெகுவாக உண்டான். (முகஸ்துதியின் அபாயம் பற்றி சங்கீதம் 12:2-4; நீதி. 26:28 ஆகியவற்றில் காணவும்.) அவனது செயல்களினால் அவன், "நான் தேவன்; ஆகையால் நான் தெய்வீகமானவன். மக்கள் என் மீது பொழியும் பாராட்டுரைகள் யாவற்றுக்கும் நான் தகுதியானவன்தான்" என்று கூறினான்!

யெகோவா வேறு விதமாய் நினைத்தார். அவர், ஏசாயா வின் மூலமாக, "நான் கர்த்தர், இது என் நாமம்; என் மகிமையை வேறொருவனுக்கும் … கொடேன்'' (ஏசா. 42:8) என்று கூறியிருந்தார். தேவனைப் பற்றி இந்தத் தீர்க்கதிரிசி, "அவர் பிரபுக்களை மாயையாக்கி, பூமியின் நியாயாதிபதிகளை அவாந்தரமாக்குகிறார்" (ஏசா. 40:23) என்று கூறினார். ஆகவே வசனம் 23ல், "அவன் தேவனுக்கு மகிமையைச் செலுத்தாத படியினால் உடனே கர்த்தருடைய தூதன்[6] அவனை அடித்தான்;[7] அவன் புழுபுழுத்து இறந்தான்" (12:23) என்று

படிக்கையில் நாம் வியப்படைவதில்லை. ஏரோதுவின் இந்த உபத்திரவத்தின் போது அவனருகில் நின்றிருந்தவர்களின் கண்ணோட்டத்திலிருந்து, யோசிப்பஸ் பின்வரும் விபரங்களைத் தந்தார்:

> அவனது வயிற்றில் தீவிரமான வலி உண்டாயிற்று; அது மிகக் கொடுமையான விதத்தில் தொடங்கியது … தொடர்ந்து, அவன் அரண்மனைக்குள் சுமந்து செல்லப்பட்டான்; … அவன் வயிற்று வலியினால் அவன் முற்றிலும் பலமற்றுப் போன போது, அவன் தனது 45ம் வயது மற்றும் தனது ஆளுகையின் ஏழாம் ஆண்டில் இந்த வாழ்வை விட்டு பிரியுமுன் ஐந்து நாட்கள் அவ்வலியினால் உபத்திரவப்பட்டான் …” (*Antiquities*, 19.8.2 [32-58]).

ஏரோதின் வியாதி எதுவாயிருக்கும் என்பது பற்றி, குடலில் உண்டாகும் புண் தொடங்கி, தீவிரமான குடல் வியாதி வரையிலும் அநேக வியாதிகள் பற்றி யூகங்கள் செய்யப் பட்டுள்ளன. ‘‘புழுபுழுத்து’’ என்பது இலக்கிய நடைச் சொற்றொடராயிருக்கக் கூடும்; அந்த நாட்களில் குடலில் புழுக்கள் ஏற்படுவது என்பது மிகவும் அதிக அளவில் பரவி யிருந்தது.[8] ஏரோதுக்கு ஏற்பட்ட வியாதி வேறு எதுவாகவாவது இருந்திருந்தாலும், புழுக்கள் ஏற்பட்டதினால் அவனது நிலை இன்னமும் அதிக சிக்கலானதாயிருந்திருக்கும். இதற்கு மாறாக, புழுக்களால் எப்பொழுதும் உண்ணப்படுவதென்ற கருத் தானது கர்த்தரிடமிருந்து வருகின்ற தண்டனையுடன் இணைந்திருப்பது வழக்கமாயிருக்கின்றது (நரகம் போன்றது; மாற். 9:48), இச்சொற்றொடரானது, ஏரோதுக்கு உண்டான வியாதியானது தேவனால் கொடுக்கப்பட்ட தண்டனையாகும் என்று எளிமையாக அர்த்தப்படுத்தப்படலாம்.

ஏரோதின் பரிதாபமான மரணத்தைப் பதிவு செய்த பிறகு, லூக்கா, “தேவ வசனம் வளர்ந்து பெருகிற்று” (வ. 24) என்று கூறினார். (இது, சபையின் வளர்ச்சியைப் பற்றிப் பேசும் இன்னொரு வழியாக இருக்கின்றது. தேவனுடைய கரத்தின் வல்லமையையும், ஏரோதின் மரணத்தையும் கண்ட கிறிஸ்தவரல்லாத சிலர், அதன் விளைவாக வசனத்தைக் கவனிக்க இன்னமும் அதிகம் ஆயத்தமாயிருக்கச் சாத்தியக் கூறுண்டு.) முதலாம் நூற்றாண்டில் செய்தித்தாள்கள் இருந் திருக்குமென்றால், ஏரோதின் மரணமானது முன் பக்கச்

செய்தியாய் இருந்திருக்கும், ஏனென்றால் உலகத்தின் வளர்ச்சி யானது உட்பக்கச் செய்திகளை அதிகமாய் மதிப்பிடுவதில்லை. ஆயினும் தேவனுடைய வசனமானது எதிர்ப்பற்று இருந்தது என்பதே தேவனுடைய கண்ணோட்டத்தில் இந்த வரலாற்றின் குறிப்பிடத் தக்க அம்சமாகும். ஆங்கில வேதாகமத்தில் வசனம் 24ல் "ஆனால்" என்று தொடங்குகின்றது, இந்த "ஆனால்" என்பது ஒரு முரண்பாட்டைத் தருகின்றது: ஏரோது இராஜா விழுந்தான், ஆனால் கர்த்தருடைய வசனம் பெருகிற்று. ஏரோது, தான் சபையை அழித்து விட முடியும் என்று நினைத் தான், ஆனால் அதற்கு மாறாக அவனே அழிந்தான்.

கி.பி. 44ல் இந்த அரசன் இறந்ததாக யோசிப்பஸ் குறிப் பிட்டார்.[9] ஏரோதின் மரணமானது, வசனத்திற்குச் சுதந்திர மான ஆளுகையைக் கொடுத்ததுடன், மற்ற கிளை முன்னேற் றங்களுக்கும் காரணமாய் அமைந்தது. ஏரோதுகளின் ஆட்சி முடிவின் தொடக்கத்தை அவனது மரணம் அடையாளப் படுத்திற்று. முதலாம் ஏரோது அகிரிப்பா மரணமடைந்த போது, யூதேயாவில் மறுபடியும் வரிசையாய் ஆளுநர்கள் நியமிக்கப்பட்டார்கள். (இவர்களில் பேலிக்ஸ் மற்றும் பெஸ்து ஆகியோர் அடங்குவார்கள்.) அதிகாரம் 26ல் நாம் இரண்டாம் ஏரோது அகிரிப்பாவைச் சந்திக்கையில், அவனது ஆளுகைப் பகுதியானது கலிலேயாவின் வடகிழக்குப் பகுதியில் ஒரு சிறிய பகுதியாக இருப்பதைக் காண்போம்.

முதலாம் ஏரோது அகிரிப்பாவின் மரணமானது யூதர்களின் முடிவின் தொடக்கத்தையும் அடையாளப்படுத்தியது. ஏரோதின் மரணத்தைப் பற்றி Encyclopaedia Britannica என்ற நூலில் பின்வருமாறு கூறப்படுகின்றது: "அவனது திடீர் மரணம் ... யூதத்திற்குப் பேரழிவாயிற்று, ஏனென்றால் அவன் தவறுகள் எவ்வளவு செய்திருப்பினும், ... ரோமாபுரி மற்றும் யூதர்கள் ஆகியோருக்கிடையே சமான நிலையை வெற்றிகரமாகக் காத்துக் கொண்டான்." பர்ட்டன் காஃப்மன் அவர்கள் இந்த நிகழ்ச்சியை, யூதர்கள்மேல் ரோமாபுரியின் சகிப்புத் தன்மை யைக் காத்திருந்த ஒரு மனிதன் நீக்கப்பட்டான் என்று குறிப் பிட்டார், மேலும் அவர், "ஏரோது அகிரிப்பாவைக் கொல்ல தேவன் தமது தூதனை அனுப்பியதன் இறுதி விளைவானது 20 ஆண்டுகளுக்குப் பின்பு தீத்துவும், வெஸ்பாஸியனும் எருசலேமை அழித்தபோது உணரப்பட்டது" என்றும்

குறிப்பிட்டார்.

தேவன் ஏரோதை நடத்திய விதத்திலிருந்து, அவருக்கு எதிரிகளே இருக்க முடியாது என்பதை தவறற்ற விதத்தில் அறிவித்தார்! இவ்வுலகமானது தேவனுடைய அரியணை யினால் கட்டுப்படுத்தப்படுகின்றது, இது சர்வாதிகாரிகளின் சிங்காசனங்களினால் கட்டுப்படுத்தப்படுவதில்லை. இயேசு, "உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு, அவர் ஒருவ ருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே" (மத். 4:10) என்று கூறினார்.

## ஏரோதுவைப் பின்பற்றியவர்கள்

ஏரோது ஒருவனே தன்னை "தேவன்" என்று முன்னிறுத்தி யவன் அல்ல (மற்றவர்களும் இருந்தார்கள்) என்ற கருத்தைச் சுட்டிக்காட்டுமுன் இதை நாம் முடிக்க விரும்புவதில்லை. ஏரோதுக்குப் பின் அநேகர் அவனைப் பின்பற்றியவர்களாய் வந்தார்கள்.

இப்படிப்பட்ட கூற்றைக் கூறும்போது, மற்றவர்களைப் பற்றிப் பேசி நமது நேரத்தைச் செலவிடும்படி நாம் சோதிக்கப் படுகின்றோம். உதாரணமாக, நேரடியாகவே தேவன் என்று கருதப்பட்டும், தொழுது கொள்ளப்பட்டும் இருந்த பார் வோன்கள், சீசர்கள் மற்றும் உள்ள மற்றவர்களின் பெயர்கள் நமக்கு நினைவுக்கு வரும். முந்திய பாடம் ஒன்றில் எத்தியோப் பிய ராஜஸ்திரீயான கந்தாகே (8:27) என்பவளைப் பற்றிப் பார்த்தோம். அவளுடைய கணவன் எத்தியோப்பியர்களால் தேவன் என்றே கருதப்பட்டான். பிறகு, தங்களைப் பின்பற்றிய வர்களால் விக்கிரகாராதனை பண்ணப்பட்டவர்கள் இருக்கின் றார்கள். விக்கிரகம் என்ற வார்த்தையானது நடிகர்களின் நடிப்புக்குச் சில சமயங்களில் பயன்படுத்தப்படுகின்றது: (தமிழ் நாட்டில் ஒரு குறிப்பட்ட இசையமைப்பாளர் "இராக தேவன்" என்றே அழைக்கப்படுகின்றார். அவர் இதைக் குறித்து என்ன நினைக்கின்றார் என்று நான் அறியவில்லை, ஆனால் அது என்னை அதிர்ச்சிக்குள்ளாக்குகின்றது). சிந்தனை, வார்த்தை மற்றும் செயல் இவற்றைத் தங்களை மையமாகக் கொண்டவர் களையும் இதில் சேர்த்துக் கொள்ளலாம். ரோமர் 1:25ல் "சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல், சிருஷ்டியைத் தொழுது

*சேவித்த'' மக்களைப் பற்றிப் பேசப்படுகின்றது; வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், அவர்கள் தங்களுக்கென்று சொந்த தேவர்களை ஏற்படுத்தினார்கள். ஏரோதும் இக்குற்றத் தைச் செய்தான் என்பது உறுதியானது. நமது நடைமுறைகளை முக்கியமாய் கவனிப்பதற்கு இக்கருத்து நம்மைத் தூண்ட வேண்டும் என்றே மறுபடியும் நான் கூறுகின்றேன்.*

*நான் மறுபடியும் நமது வசனப் பகுதியைப் பார்க்கின்றேன். வசனங்கள் 22 மற்றும் 23ல், மக்கள் "இது மனுஷ சத்தமல்ல, இது தேவ சத்தம்'' என்று ஆர்ப்பரித்த பிறகு, ''அவன் தேவனுக்கு மகிமையைச் செலுத்தாதபடியினால் உடனே கர்த்தருடைய தூதன் அவனை அடித்தான்'' என்று குறிப்பிடப் படுகின்றது. ஏரோதின் குறிப்பிட்ட பாவமானது, அவனுக்கு முன்னர் இருந்த நேபுகாத்நேச்சாரின் பாவம் போன்றதாகவே இருந்தது, அவன் தான் செய்திருந்தவைகளுக்கு தேவனுக்கு மகிமையைச் செலுத்தாமல், தன்னையே மேன்மைப்படுத்திக் கொண்டான். ''தேவனுக்கு மகிமையைச் செலுத்தாதபடி யினால்'' என்ற சொற்றொடரானது அவனைப் பற்றி நாம் பார்த்த வேறு எந்த செயலைக்காட்டிலும் அதிகம் நெருங்கிய குற்றமாய் இருக்கின்றது!*

*நாம் எப்பொழுதுமே தேவனுக்கு மகிமையைச் செலுத்து கின்றோமா? நேரம், திறமைகள், ஆளுமைத் தன்மைகள் மற்றும் வாய்ப்புகள் ஆகியவற்றினால் தேவன் நம்மை ஆசீர்வதித் துள்ளார். இன்னும் பல வழிகளிலும் நம்மை அவர் ஆசீர்வதித் துள்ளார். நாம் ஒரு சிறு செயலை நிறைவேற்றும்போது அதை மற்றவர்கள் பாராட்டினால், நாம் அதற்கான மகிமையை தேவனுக்குத் தருகின்றோமா? வெற்றியடைந்த மனிதர்களைப் பேட்டி காண்கையில் அவர்கள் ஆண்டுக்கணக்கில் தாங்கள் எடுத்த முயற்சி மற்றும் செய்த தியாகங்கள் ஆகியவற்றைப் பற்றி பேசுவதை நாம் எத்தனை முறை கேட்டிருக்கின்றோம்? உண்மை என்னவென்றால், மற்றவர்களும் அதே அளவு கடின முயற்சி செய்தும், தியாகம் செய்தும் அவற்றை அடைய முடியாமல் போயிற்று என்பதேயாகும். வெற்றி பெற்றவர் களுக்குத் தேவன் கூடுதலாக சிலவற்றைக் கொடுத்தார் - அதை அவர்கள் உணர்ந்து, தேவனை மகிமைப்படுத்த வேண்டும்!*

*நீண்ட காலத்துக்கு முன்பு தாவீது, ''என் தேவனாகிய ஆண்டவரே உம்மை என் முழு இருதயத்தோடும் துதித்து,*

உமது நாமத்தை என்றென்றைக்கும் மகிமைப்படுத்துவேன்" (சங். 86:12) என்ற கூறினார். அப். நட. புத்தகம் முழுவதிலும் இதே ஆவியின் தூண்டுதல் பெற்ற மக்களை நாம் கண்டிருக் கின்றோம். சப்பாணியாயிருந்த பிச்சைக்காரன் குணமடைந்த போது "நடந்த சங்கதிகளைக் குறித்து எல்லாரும் தேவனை மகிமைப்படுத்தினபடியால்" (அப். 4:21) என்றுள்ளது. செசரியா வில் நடந்தவைகளைப் பற்றிப் பேதுரு எருசலேமில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு விளக்கிக் கூறிய பிறகு, அவர்கள், "ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதலைத் தேவன் புறஜாதியா ருக்கும் அருளிச் செய்தார் என்று சொல்லி, தேவனை மகிமைப்படுத்தினார்கள்" (11:18). பவுலின் சுவிசேஷ ஊழியப் பயணங்கள் பற்றி நாம் படிக்கத் தொடங்கும்போது, ஒவ்வொரு பயணத்தின் முடிவிலும் அவர் அந்தியோகியாவின் சபைக்கு வந்து தாமும் தம்முடன் இருந்தவர்கள் யாவரும் செய்த ஊழியம் என்று குறிப்பிடாமல் "தேவன் தங்களைக் கொண்டு செய்தவைகளை" (14:27) என்றே குறிப்பிட்டார்கள்.

ஒருமுறை, நீண்ட காலமாக மூப்பராகவும் ஊழியராகவும் பணியாற்றிய ஒருவர் பாராட்டப்பட்டார். பாராட்டுரையைக் கவனித்துக் கேட்ட பிறகு, அவர் எழுந்து நின்று, புன்சிரிப்பு டன், "வேலித் தூணின் மேல் நீங்கள் ஒரு ஆமை இருப்பதைக் கண்டால், அது தானாகவே அங்கு வந்திருக்காது என்பதை நீங்கள் உறுதியாய் நம்ப முடியும்!" என்று கூறினார். பின்பு அவர், தமக்கு உதவியாயிருந்த அநேகருக்கு நன்றி செலுத் தினார், நிறைவில் தாம் சாதித்த யாவற்றுக்குமாக தேவனுக்கு மகிமையைச் செலுத்தினார். நாம் அனைவருமே வேலித் தூணின் மேல் இருக்கும் ஆமைகள் போன்றவர்களாகவே இருக்கின்றோம்; நாமாக அங்கு சென்று விடவில்லை! தேவனுக்கே உரிய மகிமையைச் செலுத்தும்படிக்கு தேவன் நமக்கு உதவுவாராக!

## முடிவுரை

தன்னையே மையமாகக் கொண்ட வாழ்வின் அபாயங் களை விரிவாக விளக்கும் கருத்துப் பாடமாக ஏரோதின் வாழ்வும் மரணமும் அமைந்துள்ளன. இன்றைய நாட்களில் சில வேளைகளில் நாம், "கண்ணியத்துடன் மரித்தல்" என்பது

பற்றிப் பேசுகின்றோம். மருத்துவ ரீதியாக ஒருவர் மரித்த பிறகு, அவரது வாழ்விற்கு ஆதாரமாயிருந்தவைகளினால் அவரது வாழ்க்கை கறைப்பட்டிராத வகையில் மரிக்க அவருக்குள்ள உரிமையை இதன் மூலம் நாம் குறிப்பிடுகின்றோம். ஆயினும், கண்ணியத்துடன் மரித்தல் என்பதில் மருத்துவத் தொழில் நுட்பத்தினால் ஆகக் கூடியது மிகவும் சிறிய அளவேயாகும்.[10] பணத்தினாலும், பதவியினுலும் பெறக் கூடிய மிகச் சிறந்த மருத்துவர்களால் ஏரோது சூழப்பட்டிருந்திருப்பான் என்பது நிச்சயம், ஆயினும் சில மக்கள் எப்பொழுதுமே குறைவான கண்ணியத்துடனே மரிக்கின்றார்கள். கண்ணியத்துடன் மரிப்பது அல்லது குறைவான கண்ணியத்துடன் மரிப்பது என்பது ஒரு குறிப்பிட்ட தருணத்தில் உயிர் காக்கும் ஆதாரங் களை விலக்கி வைப்பதைச் சார்ந்ததல்ல, ஆனால் வியாதி தாக்குமுன் ஒருவர் எப்படி வாழ்ந்தார் என்பதையே சார்ந்ததாக இருக்கின்றது. நீங்கள் கண்ணியத்துடன் வாழ்ந்திருந்தால், கண்ணியத்துடன் மரிப்பீர்கள். கர்த்தருடைய பரிசுத்தவான் களின் சரீரங்கள் புற்று நோயினால் உண்ணப்பட்டு வீணாவதை நான் கண்டிருக்கிறேன், ஆனாலும் அவர்கள் தங்கள் உதடுகளில் விசுவாசத்தோடும், கண்களில் நம்பிக்கையோடும், மரித்தார் கள். இதுவே உண்மையில் "கண்ணியத்துடன் மரித்தல்" ஆகும்.

நான் மரிப்பதற்குத் தயாராயிருக்கின்றேனா? நீங்கள்? நாம் நமது வாழ்வைக் கர்த்தருக்கு ஒப்புக் கொடுத்து வாழத் தயாராகாத வரையிலும், நாம் மரிப்பதற்குத் தயாராக இருக்க முடியாது!

## காட்சி-உதவிக் குறிப்புகள்

"ஏரோதின் வீடு" என்ற வரைபடத்தைப் பெரிதாக்க நீங்கள் விரும்பலாம். அதைப் பெரிதாக்கி, இப்பாடத்தின் முதல் பகுதியில் காணப்படும் ஏரோதின் குடும்பம் பற்றிய ஆய்வுக்கு அதை நீங்கள் பயன்படுத்தலாம்.

## குறிப்புகள்

*[1]"ஏரோதின் வீடு" என்ற வரைபடத்தில் பார்க்கவும். [2]மறுகட்டுமானமானது கி.மு. 19ல் தொடங்கியது, அது ஏரோதின் மரணத்திற்கு அறுபத்தி எட்டு ஆண்டுகள் பின்பு வரையிலும் முடிவடையவில்லை. [3]தள்ளி வைக்கப்பட்ட இந்த மனைவி, அரபிய ராஜாவான அரேத்தாவின் மகள் ஆவாள். "அப். நட. 2" இதழில் சவுல் தமஸ்குவில் இருந்து தப்பித்தல் பற்றிய (அப். 9:23-25) குறிப்புகளில் காணவும். [4]முதலாம் ஏரோது அகிரிப்பாவின் தகப்பனாகிய அரிஸ்தோபூலுவின் பெயர் வேதவசனங்களில் குறிப்பிடப்படவில்லை, ஆனால் ரோமர் 16:10ல் இன்னொரு அரிஸ்தோபூலு குறிப்பிடப்படுகின்றார். ரோமர் 16:10ல் குறிப்பிடப்படும் இந்த அரிஸ்தோபூலு என்பவர் பெரிய ஏரோதின் பேரன் என்று அநேகர் எண்ணுகின்றனர். அப்படியானால், புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்படும் ஏரோதின் குடும்பத்தைச் சேர்ந்த பன்னிரெண்டாவது நபராக இவர் இருப்பார். ரோமர் 16:10ல் அரிஸ்தோபூலு ஒரு கிறிஸ்தவர் என்று கூறப்படுவதில்லை, ஆனால் அவரது வீட்டாரில் சிலர் கிறிஸ்தவர்களாயிருந்தது உறுதி. அநேகமாய் அவர்களில் ஏரோதியோன் என்ற ஒரு அடிமையும் (ரோமர் 16:11) இருந்திருக்க வேண்டும்; ''யோன்'' என்ற முடிவானது, ஏரோதுகளில் ஒருவனுக்குரியவனாய் இந்த ஏரோதியோன் இருந்ததை(அல்லது இருந்திருந்ததை)ச் சுட்டிக்காட்டுகின்றது. [5]ஏரோது அகிரிப்பாவின் யூத இரத்தமானது அவனது பாட்டியாகிய மரியம்மிடமிருந்து வந்ததாகும். [6]தூதன் கண்ணுக்குக் காணப்பட்டதாக நமக்குச் சுட்டிக்காட்டப்படவில்லை. [7]வசனம் 23ல் "அடித்தான்" என்பதற்கும் வசனம் 7ல் "தட்டி" என்பதற்கும் ஒரே கிரேக்க வார்த்தைதான் பயன்படுத்தப்பட்டுள்ளது. வசனம் 7ல் இது ஒரு ஆசீர்வாதமாயிருக்கின்றது; வசனம் 23ல் இது ஒரு சாபமாயிருக்கின்றது. [8]உருளைப் புழுக்கள், நாடாப் புழுக்கள், கொக்கிப் புழுக்கள், ஊசிப் புழுக்கள் முதலியவற்றினால் மக்கள் உபத்திரவப்பட்டார்கள். [9]இது குறிப்பிடத் தக்கதாகும், ஏனென்றால் அப். நட. புத்தகத்தில் மற்ற நிகழ்ச்சிகள் நடந்த நாட்களைக் கணக்கிட இது நமக்கு மிகவும் உதவியாயிருக்கின்றது. [10]உயிர் காக்கும் அமைப்புகள் பற்றி எடுக்க வேண்டிய முடிவுகளின் இடர்ப்பாடுகளை நான் குறைத்து மதிப்பிட மாட்டேன். ஆயினும் ஒருவர் எப்படி மரிக்கின்றார் என்பதைக் காட்டிலும் அவர் எப்படி வாழ்கின்றார் என்பது அதிக முக்கியத்துவமானதாகும்.*